

விருதுநகர் கே.வி.எஸ் பள்ளி வளாக பொருட்காட்சி மைதானத்தில் "இரண்டாவது விருதுநகர் புத்தக திருவிழா 2023" வினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி மாநக ராட்சி மேயர் சங்கீதா இன்பம் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச் சந்திரன் துவக்கி வைத்து தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் பரதநாட்டியம், சிலம்பம், தப்பாட்டம், ஓவியம் நாதஸ்வ ரம், கரகாட்டம், தெருக்கூத்து, வாய்ப்பாட்டு, நாடகம், கிராமிய பாடல், மரக்கால் ஆட்டம், தவில், ராஜா ராணி ஆட்டம், தவில், வில்லிசை, எருது கட்டும் மேளம் உள்ளிட்ட கலைகளில் சிறந்து விளங்கிய மொத்தம் 30 கலைஞர்களுக்கு 2022–2023 ஆம் ஆண்டு மற்றும் 2023 –2024 ஆம் ஆண்டுக்கான கலை இளமணி, கலை வளர்மணி, கலைச்சுடர்மணி, கலை நன்மணி, கலை முதுமணி ஆகிய விருதுகள் மற்றும் பொற்கிழிகளை வழங்கினார்.



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 9 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளைநிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், ஞானதிரவியம் எம்.பி. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. துணை மேயர் ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா உள்பட பலர் உள்ளனர்.

### முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்தில் பேச்சு!

சென்னை, நவ.18-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா பயணிகளுக்கு குறைந்த செலவில் தங்கும் வசதி, விரும்தோம்பல், சாகச படகு பயணம், சுற்றுலா பேருந்து பயணம் உள்ளிட்ட சேவைகளை வழங்கி வருகின்றது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா ஆகியோர் முன்னிலையில் நேற்று (16.11.2023) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பாக செயல்பட்ட ஓட்டல் மேலாளர்களுக்கு பரிசுத்தொகை காசோலைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971-ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். சுற்றுலா கொள்கை 2023 வெளியிட்டு, சுற்றுலாத்துறை முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், படகு சவாரி மேற்கொள்ள படகு குழாம்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்களுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி. இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி!

# மதுரை வடக்கு-தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## அமைச்சர் பி.மூர்த்தி, சேடபட்டி மு.மணிமாறன் வேண்டுகோள்!





மதுரை, நவ.18-

மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணி மாறன் ஆகியோர் கீழ்க்கண்டவாறு தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்,

அதன்விபரம் வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் செய்திட கடந்த 27.10.23 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும் திருத்தம் செய்வதற்கும் வசதியாக வருகிற 18.11.2023 (சனிக்கிழமை) 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நமது கழக அரசு, வருகின்ற 18ஆம் தேதியை பணி நாளாக அறிவித்துள்ளதால் அன்றைய தினம் மற்றும் 19ஆம் தேதி ஆகிய தேதிகளில் நடைபெறவிருந்த சிறப்பு முகாம் 25.11.23 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் நாட்களில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) வாக்குச்சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித் தல், வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறும், இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, சேடபட்டி மு. மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### கூட்டுறவுத்துறை சார்பில் – நெல்லை மாவட்டம்

# பாளையங்கோட்டையில் ரூ.20 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்!

நெல்லை, நவ.18-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 70 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 1724 பயனாளிகளுக்கு ரூபாய் 20 கோடியே 1லட்சத்து 14 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா, கூட்டுறவு அமைப்புகளை கணினிமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் விழாவில் கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்து கூட்டுறவு உறுதிமொழியினை ஏற்று 1724 பயனாளிகளுக்கு 20 கோடியே ஒரு லட்சத்து 14 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இந்நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

கூட்டுறவுத்துறை மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக விளங்குகிறது.

வருவாய்த்துறை, வேளாண்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, நிதித்துறை என எத்தனையோ துறைகள் இருந்தாலும் அவை அரசின் நிர்வாக அமைப்புகளாகவே உள்ளன. ஆனால் கூட்டுறவு துறை மட்டுமே ஒரு இயக்கமாக செயல்பட்டு வருகிறது. கூட்டுறவின் அடிநாதம் பொதுமக்களை அதிலும் வேளாண் பெருமக்களை அரசோடு ஒன்றிணைக்கிறது. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஐந்தாண்டு திட்டங்கள் மக்களை வேறு கட்டத்திற்கு நகர்த்தின. அதில் வேளாண் மக்கள் தற்சார்பு நிலையை பெற்றிட கூட்டுறவு காரணமாக இருந்தது. பொருளாதாரம் மேம்பட வேண்டும். வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்ற திட்டத்தோடு அரசு செயல்பட்டு வருகிறது. அதற்கு தேவையான கடன்களை வழங்கிட வேண்டும். விவசாயிகளுக்கு பயிர் கடன், நெசவாளர்கள், பால் உற்பத்தியாளர்கள், சுய உதவிக்களுக்கு தேவையான கடன்களை வழங்கும்போது உற்பத்தி மட்டுமல்ல கிராமங்களில் சந்தை பொருளாதாரம் உயரும்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் அரசு சார்பில் ரூபாய் 12 ஆயிரத்து 110 கோடி பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. ரூபாய் 4118 கோடி நகை கடன், ரூபாய் 2 ஆயிரத்து 624 கோடி மகளிர் சுயஉதவி குழுக்கான கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் பயிர் கடனாக இவ்வாண்டு 12 ஆயிரம் கோடி கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதையும் தாண்டி ரூபாய் 13463 கோடி கடன் வழங்கியுள்ளோம். விவசாயி களுக்கு பயிர் கடன் வழங்குவதில் இலக்கையும் தாண்டி கூட்டுறவுத்துறை சாதனை படைத்து வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு பல்வேறு தொழில் நிறுவனங்களை கொண்டு வந்து அதன் மூலம் பல்வேறு வேலை வாய்ப்புகள் வழங்கி தமிழ்நாட்டில் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க இந்த ஆண்டு 7 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மட்டும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் அக்டோபர் 2023 முடிய பயிர் கடனாக 4988 உறுப்பினர்களுக்கு ரூபாய் 6519.36 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடப்பாண்டில் அக்டோபர் 2023 முடிய நகை கடனாக 61,330 நபர்களுக்கு ரூபாய் 295.53 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு கடனாக 2224 நபர்களுக்கு ரூபாய் 14.85 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய கால கடனாக 132 நபர்களுக்கு ரூபாய் 1.42 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவி குழு கடனாக 905 குழுக்களுக்கு ரூபாய் 76.09 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டும் மற்றும் வீட்டு வசதி கடனாக 251 நபர்களுக்கு ரூபாய் 10.90 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி கடனாக 104 நபர்களுக்கு 49.00 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. வேலை பார்க்கும் மகளிர் மற்றும் தொழில் முனைவோர் கடனாக 225 நபர்களுக்கு ரூபாய் 85.20 லட்சம் கடனா வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிறு வணிகர்கள் கடனாக 1402 நபர்களுக்கு ரூபாய் 1.69 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் டாம்கோ, டாப்செட்கோ, தாட்கோ மற்றும் விவசாயிகளுக்கு தானிய ஈட்டின் பெயரில் வழங்கப்படும் கடன் என மொத்தம் 77162 நபர்களுக்கு 18 வகையான கடன்கள் ரூபாய் 609.44 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் அம்பாசமுத்திரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சொந்த தயாரிப்பில் வாகை மரச்செக்கு மூலம் எடுக்கப்பட்ட சுத்தமான பொருநை தேங்காய் எண்ணெய் முதல் விற்பனையை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார். தொடர்ந்து கூட்டுறவு வார விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் ஆகியவற்றையும் அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா, தீர்மானகுழு உறுப்பினர் சுப.சீதாராம், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரம சிவஐயப்பன், ஒன்றிய செயலாளர் அருள்மணி, வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காமினிதேவன்,

கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அழகிரி, நெல்லை மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி, துணை பதிவாளர் சுப்பையா, நெல்லை கூட்டுறவு பேரங்காடி தலைவர் பல்லிக்கோட்டை செல்லத்துரை, அக்ரோ கூட்டுறவு சங்க தலைவர் சுப்ரித் சுப்பிரமணியன், உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் சேரன்மகாதேவி சரக துணை பதிவாளர் முத்துசாமி நன்றி உரையாற்றினார்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் கூட்டம், நாளை (19.11.2023-ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில், காணொலி காட்சி வாயிலாக, எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. நவம்பர் 27 'எளியோர் எழுச்சி நாள்' கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்;

2. மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து

**'அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள்: 16.11.2023.

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (16.11.2023) கூட்டுறவுத் துறையின் சார்பில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட, சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை3) மற்றும் தட்டச்சு பணிக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.கப்பையன், ஆகியோர் உள்ளனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் கீழக்கடையம் கல்யாணிபுரம் செல்லம்மாள் கடந்த மாதம் குன்னூர் பேருந்து விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார். அன்னாரது குடும்பத்தினரை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் நேரில் சென்று ஆறுதல் கூறி மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூபாய் 10000,ம் நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார், மகேஷ் மாயவன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.